

கரூர் பகுதியில் 7500 மரக்கன்றுகளை நட்டு சாதனை படைத்த மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்கி, கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி கேள்விகளுக்கு பதில் அளித்து பேசினார்.

### கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாட்டில்

# புதிதாக திறக்கப்பட்ட பொதுத்துறை வங்கிகளின் எண்ணிக்கை என்ன?

## மக்களவையில் - ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி!



புதுடெல்லி, ஆக. 6 -

தமிழ்நாடு மற்றும் மகாராஷ்டிராவின் கிராமப்புறப் பகுதிகளில், குறிப்பாக தமிழ்நாட்டின் வேலூர் மாவட்டத்தில் உள்ள அணைக்கட்டு, கே.வி.குப்பம், வாணியம்பாடி, ஆம்பூர் மற்றும் குடியாத்தம் வட்டாரங்களில் பொதுத்துறை வங்கிக் கிளைகள் மற்றும் ஏ.டி.எம்.கள் உள்ளதா என்பதை அரசு ஆய்வு செய்துள்ளதா?, அப்படியெனில், வங்கிக் கிளைகளைத் திறப்பதற்கான தூரம் அல்லது மக்கள் தொகை வரம்புகள் குறித்து அரசுக்கு ஏதேனும் பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகள் அல்லது வழிகாட்டுதல்கள் உள்ளதா, மற்றும் அதன் விவரங்கள் என்ன? கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாட்டின் தாராபுரம் சட்டமன்றத் தொகுதியில் இந்த விதிமுறைகளின் கீழ் திறக்கப்பட்ட புதிய பொதுத்துறை வங்கிகளின் எண்ணிக்கை மற்றும் அக்கிளைகளின் பெயர்கள் என்ன? என ஈரோடு தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ் கேள்வி எழுப்பினார்.

தாராசிவ் மாவட்டத்தில் உள்ள 60 கிராமங்களில் புதிய வங்கிக் கிளைகளைத் திறக்க மகாராஷ்டிராவிலிருந்து அரசு பெறப்பட்ட முன்மொழிவுகளின் எண்ணிக்கை மற்றும் அதில் எத்தனை முன்மொழிவுகள் அங்கீகரிக்கப்பட்டன? வங்கி உள்கட்டமைப்பில் உள்ள கடுமையான இடைவெளி காரணமாக, Jan Dhan, DBT மற்றும் PMJJBY போன்ற திட்டங்களில் இருந்து மக்கள் நீக்கப்படுவது குறித்து அரசு ஒப்புக்கொள்கிறதா? அப்படியெனில், இதை சரிசெய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? இந்த பகுதிகளில் டிஜிட்டல் இடைவெளியைக் குறைக்க India Post Payment Bank அல்லது Mobile Banking வேன்களைப் பயன்படுத்த அரசுக்கு ஏதேனும் திட்டங்கள் உள்ளதா? அப்படியெனில் அதன் விவரங்கள், அதற்கான காலக்கெடு மற்றும் பட்ஜெட் ஒதுக்கீடு என்ன?

என்று மக்களவையில் நிதி அமைச்சரிடம் ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர், கழக இளைஞர் அணி துணை செயலாளர் கே.இ.பிரகாஷ் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஒன்றிய நிதித்துறை இணை அமைச்சர் பங்கஜ் சவுத்ரி அளித்த பதில் வருமாறு ; நாட்டின் அனைத்து மக்கள் வசிக்கும் கிராமங்களிலும் 5 கிலோ மீட்டர் தொலைவிற்குள் வங்கி சேவை மையம் (Bank Branch Business Correspondent India Post Payments Bank) முயற்சி வங்கி சேவை மையங்களின் இருப்பிடம், Geographic Information System (GIS) வழியாக Jan Dhan Darshak (JDD) என்ற செயலி மூலம் கண்காணிக்கப் படுகிறது. வங்கிகளால் JDD செயலியில் பதிவேற்றப்பட்ட தரவுகளின் அடிப்ப டையில், நாட்டில் உள்ள மொத்தம் 6,01,328 மக்கள் வசிக்கும் கிராமங்களில் (Inhabited Villages), 6,00,803 (99.91%) , 5 சுற்றளவில் இணைக்கப்பட்டுள்ளன. 30.06.2025 நிலவரப்படி, JDD செயலியில் உள்ளபடி மகாராஷ்டிரா மாநிலத்தில் 7,593 வங்கி கிளைகளும், தமிழ்நாட்டில் 6,397 வங்கி கிளைகளும், மகாராஷ்டிரா மாநிலத்தில்11, 604 ஏடிஎம்கள், தமிழ்நாட்டில் 13,374 ஏடிஎம்கள் உள்ளன.

தாராசிவ் மாவட்டத்தில் உள்ள 60 கிராமங்களில் புதிய வங்கிக் கிளை திறப்பு குறித்து சமீபத்தில் எந்தவொரு முன்மொழிவும் பெறப்படவில்லை என்று SLBC, மகாராஷ்டிரா தெரிவித்துள்ளது. இருப்பினும், செப்டம்பர் 2023ல் தாராசிவ் மாவட்ட ஆட்சியரிடமிருந்து அம்மாவட்டத்தில் உள்ள 41 இடங்களில் வங்கிக் கிளைகளைத் திறக்க ஒரு கோரிக்கை பெறப்பட்டது. அந்த 41 இடங்களும் ஏற்கனவே ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வங்கி சேவை மையங்களுடன் இணை க்கப்பட்டுள்ளதாக ஆய்வில் கண்டறியப்பட்டது. மேலும், கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாட்டின் தாராபுரம் சட்டமன்றத் தொகுதியில் எந்தவொரு புதிய பொதுத்துறை வங்கிக் கிளையும் திறக்கப் படவில்லை. புதிய வங்கிக் கிளைகளைத் திறப்பதற்கான முன்மொழிவுகளின் தரவு ஒன்றிய அளவில் பராமரிக்கப்படவில்லை. தமிழ்நாடு மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களில், IPPB வங்கி சேவைகள் வழங்க தபால் நிலையங்களை பயன் படுத்துகிறது. தமிழ்நாட்டில் சுமார் 11,855 தபால் நிலையங்கள், மகாராஷ்டிராவில் 14.020 தபால் நிலையங்கள் வங்கி சேவைக்கான மையங்களாக உள்ளன. IPPB கிராம ப்புறங்க ளில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு வீட்டிற்கே சென்று சேவைகளை வழங்குவதன் மூலம் டிஜிட்டல் இடைவெளியைக் குறைக்க உதவி வருகிறது என்று கூறினார்.

### தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.கழகம் சார்பில்

# முத்தமிழறிஞர் தமிழினத்தலைவர் கலைஞர் 7ஆம் ஆண்டு நினைவு நாள்!

## மாவட்டப் பொறுப்பாளர் க.அன்பழகன் எம்.எல்.ஏ. அறிக்கை!



தஞ்சாவூர், ஆக. 6 -

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கும்பகோணம் அருகே உள்ள வலையப்பேட்டை பைபாஸ் ரோட்டில் அமைந்துள்ள முத்தமிழ் அறிஞர் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்த உள்ளதால் கழக நிர்வாகிகள், முன்னாடிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள மாவட்ட கழக பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :

நாளை (07.08.2025 - வியாழக்கிழமை) காலை 8.00 மணியளவில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கும்பகோணம், வலையப்பேட்டை பைபாஸ் சாலையில் அமைந்துள்ள கலைஞர் கோட்டத்தில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, பேரூர். பகுதி கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாநில சார்பு அணிகளின் நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட, ஒன்றிய பிரதிநிதி கள், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள், கழக முன்னோடிகள். முன்னாள், இந்நாள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் குறித்த நேரத்தில் தவறாது கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.



தி.மு.க. சட்டத்துறை சார்பில் மயிலாடுதுறை மாவட்ட வழக்கறிஞர் அணி பயிற்சி பாசறை கூட்டம் எலந்தங்குடி வி.எஸ்.பி. திருமண மஹாலில் நடைபெற்றது. கூட்டத்தில் கழக சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோவன் வழக்கறிஞர்களுக்கு பயிற்சி வகுப்பு எடுத்தார். உடன் மயிலாடுதுறை மாவட்ட கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., சட்டத்துறை இணைச் செயலாளர்கள் சூர்யா.வெற்றிகொண்டான், கே.எஸ்.ரவிச்சந்திரன், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம் மற்றும் பலர் உள்ளனர்.



உதகையில் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் மற்றும் இளைஞர் திறன் திருவிழா நிகழ்ச்சியை அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் தொடங்கி வைத்தார். உடன் கூடுதல் ஆட்சியர் செல்வி அபிலாஷ் கௌர், மகளிர் திட்ட இயக்குநர் மரு.ஜெயராமன், உதவி இயக்குநர் / மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் சுப்பிரமணியன், நீலகிரி தி.மு.க. மாவட்டப் பொறுப்பாளர் கே.எம். ராஜு, மாவட்ட அவைத்தலைவர் போஜன், உதகை நகரமன்றத் தலைவர் திருமதி வாணீஸ்வரி, துணைத் தலைவர் ரவிக்குமார், திட்டக்குழு உறுப்பினர் ஜார்ஜ், உதகை நகர மன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் உள்ளனர்.



பெரம்பலூர் மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றிடும் வகையில், குன்னத்தில் இருந்து சென்னைக்கு குளிர்சாதன வசதியுடன்கூடிய பேருந்து சேவையினை போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார். இதில் எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### நீலகிரி மாவட்டத்தில், நடைபெற்ற மாபெரும் தனியார் துறை

# வேலைவாய்ப்பு முகாம் 256 பேருக்கு பணி நியமன ஆணை!

## அரசு தலைமைக் கொறடா ஆணைகளை வழங்கினார்!

நிலகிரி, ஆக. 6 -

நீலகிரி மாவட்டத்தில், நடைபெற்ற மாபெரும் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாமில் அரசு தலைமைக் கொறடா கா. ராமச்சந்திரன் துவக்கி வைத்து, 216 வேலை நாடுநர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். நீலகிரி மாவட்டம், உதகை அரசு பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, மாவட்ட நிர்வாகம், வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டு மையம், தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்புற வாழ்வாதார இயக்கம் இணைந்து நடத்திய மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் மற்றும் இளைஞர் திறன் திருவிழா நிகழ்ச்சியினை, அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் துவக்கி வைத்து. 109 ஆண்களும், 138 பெண்களுக்கும். 05 மாற்றுத்திறனாளிகள் ஆண்களும் மாற்றுத்திறனாளிகள் பெண்க ளும் என மொத்தம் 256 வேலை நாடுநர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இம்முகாமில், அரசு தலைமைக் கொறடா தெரிவித்ததாவது :

முதலமைச்சர் அவர்கள் படித்து முடித்த இளைஞர்களுக்கு உடனடியாக வேலை கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில், அனைத்து மாவட்டங்களிலும் வேலைவாய்ப்பு முகாம்களை நடந்த அறிவுறுத்தி உள்ளார்கள். அந்த வகையில் நமது மாவட்டத்தில் ஒவ்வொரு மாதமும் மூன்றாவது வெள்ளிக்கிழமை சிறிய அளவில் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும், ஆண்டுக்கு இருமுறை பெரிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. ஏற்கனவே, நமது மாவட்டத்தில் நடைபெற்ற 08 வேலைவாய்ப்பு முகாம்களில் 3.575 வேலை நாடுநர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப் பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக இன்றைய தினம்! நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் சென்னை, கோவை, சேலம், ஈரோடு உள்ளிட்ட பகுதிகளிலிருந்து 60க்கும் மேற்பட்ட தனியார்துறை வேலை அளிப்பவர்கள் கலந்து கொண்டு தங்கள் நிறுவனங்களுக்கு ஆட்களை தேர்வு செய்தனர்.

இம்முகாமில் 1ஆம் வகுப்பு தேர்ச்சி முதல் 12 தேற்ச்சி, பட்டதாரிகள், பட்டயப்படிப்பு படித்தவர்கள், ஐ.டி.ஐ. தொழில் கல்வி பெற்றவர்கள், பொறியியல் பட்டம், கணினி இயக்குபவர்கள். ஓட்டுநர்கள். தையல் கற்றவர்கள் என அனைத்துவித தகுதியாளர்களும் கலந்து கொண்டனர். இன்று நடைபெற்ற முகாமில் கலந்து கொண்டு பணி நியமன ஆணை பெற்ற அனைவரும் நன்றாக பணியாற்ற எனது பாராட்டுகளையும். வாழ்த்துக்களையும் தெரிவித்து கொள்கிறேன் என அரசு தலைமைக் கொறடா தெரிவித்தார்.

இம்முகாமில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) செல்வி அபிலாஷ் கௌர் மகளிர் திட்ட இயக்குநர் மரு.ஜெயராமன், உதவி இயக்குநர் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் சுப்பிரமணியன், உதகை நகரமன்றத் தலைவர் திருமதி வாணீஸ்வரி, துணைத் தலைவர் ரவிக்குமார். திட்டக்குழு உறுப்பினர் ஜார்ஜ். வேலை நாடுநர்கள் மற்றும் பல்வேறு அரசுத் துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### தஞ்சை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 7ஆம் ஆண்டு நினைவுதின அமைதி ஊர்வலம்!

## மாவட்டப் பொறுப்பாளர் தி.பழநிவேல் அறிக்கை!



தஞ்சாவூர் , ஆக. 6 -

தஞ்சை தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7ஆம் ஆண்டு நினைவு தின அமைதி ஊர்வலம் பட்டுக்கோட்டையில் நடைபெற உள்ளதாக மாவட்ட கழக பொறுப்பாளர் தி.பழநிவேல் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை பின்வருமாறு : நாளை (07.08.2025 - வியாழக்கிழமை) காலை 9.00 மணியளவில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு பட்டுக்கோட்டை அண்ணாசிலையிருந்து, ஊர்வலமாக புறப்பட்டு, தலைமை தபால் அருகில் உள்ள தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் தஞ்சை தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட நாடாளுமன்ற. சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள். மாநில கழக நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள். ஒன்றிய, பேரூர், நகர, கழக செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள். துணை அமைப்பாளர்கள், மாவட்ட, ஒன்றிய பிரதி நிதிகள். வட்ட, கிளைக் கழக செயலாளர்கள். கழக முன்னோடிகள், முன்னாள் இன்னாள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

இவ்வாறு தஞ்சை தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் தி.பழநிவேல் அறிக்கை வெளியிட்டுள்ளார்.




தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் ஆலோசனைப்படி மாணவர் அணி துணை அமைப்பாளர் பி.முனுசாமி தலைமையில் செட்டிகரையில் உள்ள அரசு பொறியியல் கல்லூரி மாணவ மாணவிகளிடம் கல்லூரி தோறும் கழக மாணவரணியின் விழிப்புணர்வு பிரச்சார துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டது. உடன் கிழக்கு ஒன்றிய செயலாளர் கே.பி.சக்திவேல்,பொறியாளர் அணி அமைப்பாளர் வெற்றிவேல்,மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் இன்பரசன், ராஜ்குமார், சக்திவேல், காரல் மற்றும் சத்யராஜ், ரகு, உதயபாரதி, சுரேஷ் மற்றும் கழகத்தினர் பங்கேற்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆயிரம்விளக்கு எஸ்.ஏ.எம்.உசேன்

### ஆகஸ்ட் 6 (2019)



தனது இளமைக் காலத்திலேயே, கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, தனது குடும்பத்தைப் பற்றிகூட கவலைப்படாமல் ஆயிரம்விளக்கு பகுதி கழகப் பணிகளில் முழுநேரம் ஈடுபட்டு வந்தவர்.

வட்டச் செயலாளர், பகுதிச் செயலாளர், மாவட்டத் துணைச் செயலாளர், துணை அமைப்புச் செயலாளர், கொள்கைப் பரப்பு இணைச் செயலாளர், தலைமை நிலையச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

நெருக்கடிநிலை காலத்தில் மிசா சட்டத்தின்படி இருமுறை கைது செய்யப்பட்டார். மேலும், கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகத்தின் சார்பில் 2013ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் “கலைஞர் விருது” வழங்கப்பட்டது.

“தி.மு.கழகத்தின் கையிலே கிடைத்த ஆயிரம்விளக்கின் அற்புத விளக்கு உசேன்” என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப் பெற்றவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**